**Page No.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.146/**2019**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW1
Defendant :
Court :

Name : வீரக்குமார்
Father' s Name : தங்கராஜ்பிள்ளை
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

31.07.2026 CC No.146/2019 அ.சா.1 வீரக்குமார்

( எதிரி காணொலி வாயிலாக ஆஜரானார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

<u>**முதல் விசாரணை**</u>:

நான் T.புதுார், பஜனை மடத்தெரு, திருப்புவனத்தில் குடியிருந்து எலக்ட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். கையொப்பம் செய்து நிறைய நாள்கள் ஆனதால் எங்கு வைத்து போட்டேன் எதற்காக போட்டேன் என்று ஞாபகமில்லை. நகை திருட்டு நடந்து அந்த நகை ரெக்கவரி சம்பந்தமாக கையெழுத்து போட்டதாக ஞாபகமுள்ளது. எவ்வளவு நகை எங்கு வைத்து ரெக்கவரி செய்தார்கள் என்ற விவரம் ஞாபகமில்லை. **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்துக்கள் முறையே அ.த.சா.ஆ.1 மற்றும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.31 14:01:12 +0530

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 27.05.2008ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் திருப்புவனம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 110/2008 என்ற வழக்கில் திருப்புவனம் சார்பு ஆய்வாளர் போலீஸ் பார்ட்டியுடன் மணலூர் பக்கம் ரோந்து பணியில் இருந்தபோது அங்கு சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் எதிரி பாபுஆறுமுகம் என்பவரை எனது மற்றும் சாட்சி சீனிவாசன் ஆகியோர்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் மேற்படி எதிரியை விசாரணை செய்தபோது மேற்படி எதிரி இந்த வழக்கு சம்பந்தமாக எவ்வித துன்புறுத்தலோ தூண்டுதலோ இன்றி தானா முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அதே நாள் 08.30 – 09.00 மணியளவில் டி.புதுார், பஜனைமட தெருவில் உள்ள பூமயில் க/பெ.மயில்சாமி என்பவரது புதுவீட்டின் பின்புறம் வைத்து எதிரி பாபு ஆறுமுகம் எடுத்து ஆஜர் செய்த 24 கிராம் எடையுள்ள கோதுமைமாடல் தங்க செயின் ஒன்று அத்தாட்சியில் கைப்பற்றினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் கையொப்பம் செய்தோம் என எனது போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றும், எதிரி எனது உறவினர் என்பதால், எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.31 14:01:20 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.